செ.வெ.எண்.157 நாள் : 25.11.2016

## பெருநகர சென்னை மாநகராட்சியின் வரிகளை பழைய 500 ரூபாய் (மட்டும்) நோட்டுகளை பயன்படுத்தி செலுத்திட 15.12.2016 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

## ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

------

பெருநகர சென்னை மாநகராட்சியின் வரிகளை பழைய 500 ரூபாய் (மட்டும்) நோட்டுகளை பயன்படுத்தி செலுத்திட 15.12.2016 (ஞாயிற்றுக்கிழமை மற்றும் 12.12.2016 தவிர) வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு பழைய 500 ரூபாய் மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்களை பயன்படுத்தி உள்ளாட்சி அமைப்புகளின் வரிகளை செலுத்தலாம் என அறிவித்ததையடுத்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் சொத்துவரி, தொழில்வரி, மற்றும் இதர வரிகளை பொதுமக்கள் பழைய 500 ரூபாய் மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்களை பயன்படுத்தி செலுத்த வழிவகை செய்யப்பட்டு, கடந்த 12.11.2016 முதல் பெருநகர சென்னை மாநகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள 446 சிறப்பு முகப்புகள் (Counters) மூலம் வரிவசூல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தற்போது மத்திய அரசு பழைய 500 ரூபாய் நோட்டுக்கள் மூலம் மட்டும் பொதுமக்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு செலுத்த வேண்டிய வரிகளை செலுத்த 15.12.2016 வரை காலநீட்டிப்பு அறிவிப்பு வெளியிட்டதையடுத்து, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில் வரி மற்றும் இதர வரிகளை பழைய ரூ,500/– நோட்டுக்கள் மூலம் மத்திய அரசு விதித்துள்ள காலக்கெடுவான 15.12.2016 (ஞாயிற்றுக்கிழமை மற்றும் 12.12.2016 தவிர) வரை செலுத்தலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**